ஸ்ரீராமஜயம்.

திருவேங்கடக் கலம்பகம்.

மூலபாடம்.

பொற்களந்தைப்பதி

முத்தமிழ்க்கவி

வீரராகவ முதலியார்

செய்தருளியது.

இஃது

சென்னபட்டணம்:

ஊ. புஷ்பரதசெட்டியாரால்

தமது

கலாரத்நாகரம் என்னும்

அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

1886.



நன்றாக. குருவாழ்க. குருவேதுணை.

திருவேங்கடக்கலம்பகம்.

துதிகவி கலிவிருத்தம்.

விரகறிமுத்தமிழ்வீரராகவன்
வரகவிமாலையைவழுத்துந்தோறெலாம்
உரகனும்வாணனுமொக்கக்கூடினால்
சிரகரகம்பிதஞ்செய்யலாகுமே.

காப்பு—கட்டளைக்கலித்துறைகள்.

பூப்பாதம்வேங்கடவெற்பில்வைத்தோர்புயல்போலநின்றேன்
மாப்பாவைமேவும்பெருமாள்கலம்பகமாக்கவிக்குக்
காப்பாகும்வேதக்கரும்பிழிசாறெனக்கன்னித்தமிழ்ப்
பாப்பாடியநங்குருகாபுரீசன்பராங்குசனே. (௧)

குருகையர்கோன்பொய்கைபேய்பூதன்பாணன்குறையற்பிரா
திருமழிசைப்பெருமாள்குலசேகரன்றென்புதுவை [ன்
வருமுனிகோதைதென்கோளூர்க்கதிபதிமண்டங்குடிக்
கரசிவர்தாளைப்பணிவாம்வினையையகற்றுதற்கே. (௨)

ஐங்கோலைவென்றுகைக்கொண்டமுக்கோலனையுடுத்த
செங்கோலவாடையன்கார்க்கோலமாயன்றிருச்சமயம்
சங்கோலிடுங்கடன்மாயிருஞாலந்தழைக்கவைத்தோன்
பைங்கோலக்காவுடைப்பூதூர்முனிபுகழ்பாடுதுமே. (௩)

மங்காதகீர்த்தியெதிராசர்பாதமணிமுடியா
தங்காதலாற்றந்தலைக்குடிக்கொண்டுதடங்கடல்சூழ்
அங்காசினியைப்புரக்குமெட்டெட்டெனையிரண்டாம்
சிங்காதனக்குருராயர்தம்பேர்சொலிற்றீதறுமே. (ச)

பொற்பாலிற்கண்டுயில்வேங்கடவாணன்புகழளவிட்
டற்பாற்கலம்பகநான்பாடவெண்ணுதலாய்முலையின்
கற்பான்மணங்கமழ்செவ்வாய்ப்பவளநறுங்குதலைச்
சொற்பாலர்திங்களைக்கையாற்பிடிக்கத்துணிந்தெழலே. (ரு)

நூல்.

ஒருபோகுகொச்சகக்கலிப்பா.

இது எட்டடித் தரவு—க.

மலர்மேவுதிருமகளும்வாட்டடங்கணிலமகளும்
அலர்மேவுகுழனீளையணைக்குமிருமருங்கிருப்ப
வலனோங்குபரமபதமாமணிமண்டபத்திலமர்
நலனோங்குபரம்பொருளாய்நான்குவியூகமுமானாய்
உடயகிரிப்புயராமனொடுகண்ணன்முதலான
விடவருவமுமெடுத்தவிறலுயிர்தோறுங்குடிகொள்
அந்தரியாமியுமானதமையாமேயெளிதாக
இந்தநெடுவேங்கடத்திலெல்லோருந்தொழநின்றோய்.

இவை ஈரடித்தாழிசைகள்—சு.

களிகடல்சூழ்சகமகட்குநாயகனீமாவலிபால்
எளியவர்போன்மூவடிமண்ணிரந்தவிதமென்னேயோ. (க)

நீளியவானவர்தலைமாலிலக்கவியவளர்ந்தருணின்
தாளிணைப்பூவுரகமலைத்தலைப்பூத்ததிசயமே. (உ)

அலகில்பகிரண்டமெலாமகன்றவயிற்றடக்குமுனை
இலகுவடச்சிறுதளிரொன்றெந்தவிதந்தாங்கியதே. (௩)

கந்தப்பூவயனுர்க்குக்கனமறையைப்போதித்தாய்க்
கந்தச்சாந்திவினிதானருங்கலைகூறத்தகுமே. (௪)

அனைத்துயிருமாயையெனுமரும்பாசத்தசைத்தாட்டும்
உனைக்கனிவாயாய்ச்சியெவ்வாறுரலொடுகட்டினரம்மா. (௫)

மிகநம்பியான்றெழுமுன்மெல்லடியிற்பிறந்தகங்கை
குகனம்பிவிடவதன்மேற்கொடுகடந்தாயிதுநன்றே. (௬)

இவை ஈரடி அராகங்கள்—௪.

திகழ்பிறை யெயிறுள சினமுதிர் பணியது
நகுமணி முடியினி னடனவி லடியினை. (௧)

இருண்முகில் சொரிதலி னினகிரா தளருதல்
கருதுபு வரையொரு கவிகைகொள் மதுகையை. (௨)

ஒளியுமிழ் மணிமுடி யுளதரு பதன்மகள்
களிகொள வலகில கலையருள் பெருமையை. (௩)

சலசல வெனமத சலமிழி மலையிடர்
தொலைவுற நெடிவரை துணைவரு கருணையை. (௪)

இவை பெயர்த்தும் ஈரடித் தாழிசைகள்—௬.

நன்மீனவுருவெடுத்தநான்றிலொருசெலுக்கிடந்த
பன்மீனத்தடங்கடலைப்பலகிரியாலடைத்தனையே. (௧)

விண்ணகஞ்சேரண்டருணவேலையமுதருளியநீ
மண்ணகஞ்சேரண்டர்திருமனைவெண்ணெய்க்காடினையே. (௨)

தலங்கிலவாரிசத்தவனைச்சுதனாகப்படைத்தருணி
இலங்கிலவேற்றசரதன்சேயெனப்பெரும்பேர்பெற்றனையே. ()

உம்பர்முதல்யாவருக்குமுயர்வாழ்வைப்பணித்தருணி
இம்பர்தருங்காணிக்கையிச்சியாநின்றனையே. (௪)

நினையொருசக்கிரியுன்காணாத்தபொற்பூவிலும்பாண்டம்
வனையொருசக்கிரிசாத்துமட்பூவையுவந்தனையே. (௫)

கைம்மானினுரிபோர்த்தகண்ணுதலுமளக்கவொண்ணாப்
பெம்மானின்விளையாட்டுப்பேதையேன்சொலும்பாற்றே. (௬)

இவை நாற்சீர் ஓரடி அம்போதரங்கம்—௨.

கனகநகத்தூர்கமஞ்சுன்முகில்போல்
வினதைமகத்தன்மேல்வருதன்மையை. (௧)

கருமாகடன்மேற்கலந்தசைவலத்தில்
திருமார்பினிற்சேர்தேங்கமழ்துளவினை. (௨)

இவை முச்சீர் ஓரடி அம்போதரங்கம்—௪.

இருசுட ரிருகை சுமந்தனை
இணைநெடு மருதிடை சென்றனை
அருமறை முடியில மர்ந்தனை
அடியவ ரகமலர் நின்றனை.

இவை இருசீர் ஓரடி அம்போதரங்கம்—௮.

தரையி டந்தனை
திரைகி டந்தனை
சகடு வென்றனை
பகடு கொன்றனை

அருள் சுரந்தனை
மருடு ரந்தனை
அலகி கந்தனை
உலகு கந்தனை
எனவாங்கு [இது தனிச்சொல்.]

இது இருபத்திரடியால் வந்த நேரிசை ஆசிரியச்சுரிதகம்.

பதின்மர்வழங்கு முதிர்தமிழ்மறையும்
கோதிலாக்கிளவி வேதமோர்நான்கும்
வினவுதிருச்செவி யனகபுராதன
இருவிபூதிக்கு மொருதனிமுதல்வ
ஒப்பிலாதவென் னப்பவிராமய
மலிபெருங்கருணை யலையெறிகடைக்கண்
அங்கனையலர்மேன் மங்கைமணாள
நித்தநிற்றொழவரும் பத்தர்தாள்சேர்த்தும்
படிக்குலமாகக் கிடக்கப்பெறுகிலெம்
எனமுனிக்கணமு மளனினைத்தருக
ஓங்குசீர்கெழீஇய வேங்கடநாயக
வேணவாவோடுநிற் காணவந்தீண்டும்
திருக்கிளரமரர் நெருக்குறுமெல்லையில்
பொன்றிகழவிர்முடி யொன்றொடொன்றுரிஞ்சலில்
கனகநுண்டுகளுதிர் சினதுசந்நிதியில்
திரளைவிலக்குநர் காதலவேத்திர
அடியுண்டொதுங்கிக் கிடப்பமெனவந்து
வணங்குபுதொழுதின் குணஞ்சிலதிதிப்பல்
பீடுளவுளத்தே சேடபூதனுமாய்ச்
சந்ததமிகுபர தந்திரனாகி

உளகயிங்கரிய முகப்பால்
அநுதினஞ்செயவைத்தருண்மதியெனவே. (க)

நேரிசைவெண்பா.

வேங்கடவா சத்திருமான் மேற்பத்தி யுள்ளசனர்
தாங்கடவா நிற்பர்பவ சாகரத்தைத் - திங்கடவா
சித்தமே கண்ணன்பாற் சிந்தமதித் தோனவனை
நித்தமே கண்ணன்பா னீ. (உ)

கட்டளைக்கலித்துறை.

நீயேகத்தாவென்றறியாதுபாவியர்நிந்தைசொல்லி
வாயேகத்தாநிற்பரென்சொல்லுகேனவர்வல்வினையாம்
பேயேகத்தாமுய்யுங்காலமுண்டோகைப்பிடித்தகுறள்
வேயேகத்தாய்வடவேங்கடமேவியமெய்ப்பொருளே. (ங)

கலிநிலைத்துறை.

பொருளடுத்த முதிர்திஞ்சொற் பூந்தமிழாற் சிறியேனிப் பு
வியிற்போக, மருளடுத்த மாந்தர்தமைப் பாடாதுன் புகழ்பாட
வரந்தந் தாள்வாய், அருளடுத்த கடைக்கண்ணு வம்புயப்பெண்
ணடுத்துறையு மகன்றமார்பா, இருளடுத்த மலர்ச்சோலை யின
மடுத்த வடமலைவா ழெம்பிரானே. (ச)

இரங்கல்

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவண்ணவிருத்தம்.

எம்பிரான் மழைதோ யஞ்சனு சலம்வா ழிந்திரா தியர்விண்
ணோர், தம்பிரா னெனையாள் கின்றிலா னணிதார் தந்திலா னி
துவென்னே, கம்புளே மணிகா லம்புளே யிணைதேர் கம்புளே
கணிதன்று, அம்புளே யடல்சூர் சிம்புளே நிகர்வே ளம்புளே
படுமன்னே. (ரு)

இரங்கல்.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

முன்னஞ் சினவி மலைந்தாங்கு முனிவா ளியினுந் கனைகடலை, இன்னம் பொருவ னெனிலிங்ங னிருந்திக் கோதை வருந்துவளோ, தன்னந் தனிதா னறிதுயில்கூர் சயனத் தலமாய் நயனளிக்கும், வன்னந் திகழ்தண் டளிர்க்கடவுள் வடத்தான் வடவேங் கடத்தானே. (சு)

புயவகுப்பு—ஆசிரியவண்ணவிருத்தம்.

தானமக லாதவிமை யோர்மகிழ நீழலிடு
  தாருவளர் சாகைநிரை தமையொத்திலங்கின
தாளமுலை ஞாலமக ணீள்பசிய தாளுடைய
  தாமரையின் மேவுகொடி தழுவக்குழைந்தன
சாலநல மேவிடையர் கோலமனை நாலுமுறி
  தாவிநவ நீதமொடு தயிரைக்கவர்ந்தன
தாமமுடி ராவணன்வி சாலநெடு வேலைநிகர்
  தானையொடு மாளவடு சமரைத்தொடங்கின (எ)

கானிலிகன் மான்மடிய நீடுசிலை கோலிவரு
  கால்படர்வ போலவொரு கணையைத்துரந்தன
காசடைகி லாதுகரு காதுவெளி ருதகுரு
  காபுரியின் மாறர்புகல் கவியைப்புனைந்தன
காமர்துளி தேவர்திரு நாடளவு லாவவொரு
  கார்வரையி னுனெடிய கடலைக்கடைந்தன
காதிணையி லாடுகுழை காலும்வெயின் மூழ்கியிருள்
  காய்கனக வாடைபொதி கருவெற்பினின்றன (அ)

வானமுகில் கூடியொழி யாதபொழி போதுநிரை
  வாடுதலு றுமல்கன மலையைச்சுமந்தன
வாசமதி ஆரம்விடு பாளிதப ராகநறு
  மான்மதப டீரமிவை மருவிக்கமழ்ந்தன

வாளிரவி சோதிமதி சூடுமிரு நாகமென
வாகையுடை யாழிபரு வரிநத்தணிந்தன
வாழ்விசய னேறிணையி லாதவொரு தேரில்விசி
வாசிநிரை கோல்கொடமர் வயின்மிக்குறைந்தன (௬)

தேனினமு லாவியறு காவிடறி யோலமிடு
தேமலிது ழாய்தொடையல் செறியச்சிறந்தன
தேகவெழி லானநதி வாயினெழு கால்களிவை
சீரியவெ ளுவுலகு தினமெய்ச்சவிஞ்சின
தேனனைய நாதமெழ வூதசிறு வேயினிடை
சேர்தொளைகண் மூடிவிடு செயலைப்புரிந்தன
சீதமது மாரிசொரி சோலைவளர் சாரல்வட
சேடகிரி மாயன்வர சிகரப்புயங்களே. (எ)

நேரிசைவெண்பா.

புயங்கமலை மேற்றெழுத புண்ணியர்க்கு முண்டோ
பயங்கமலை மேவு பரமன் - வியங்கமலம்
சேருநாட் டத்த னிலமே லமருலகத்
தாருநாட் டத்தன் சரண். (அ)

கட்டளைக்கலித்துறை.

சரணமெனத்தன்சரணேயடைந்தசனர்சனன
மரணமடுத்துவருந்தாதுதன்பதம்வாழவைக்கும்
கிரணம்விரிக்குமதிதீண்டுஞ்சேடகிரியிலம்பொன்
அரணமுடுத்ததிருக்கோயின்மேவியவற்புதனே.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

அற்புதனலர்மேன்மங்கையாருயிர்கணவன்சேட
வெற்பினின்மடவாய்காமவேட்குநீவெருவலென்னே
பொற்பமர்தடங்கண்வாளிபுருவவில்லல்குற்றிண்டேர்
பற்பலகலந்தோய்கொங்கைப்பகட்டையும்படைத்தாயன்றே.()

கொச்சகக்கலிப்பா.

அன்றுலகமுண்டுமிழ்ந்தாயகிலசெகற்காரணனி
என்றுனக்கேயாளானேமிமிழருவிவடமலைவாழ்
மன்றல்கமழ்துளவோயுன்வயிற்றுளெங்களொடேகடைநாள்
சென்றுறைந்துமீளவருந்தேவரையாமதியோமே. (கக)

கட்டளைக்கலித்துறை.

மதியாரிகச்சுகங்காதலியாரண்டர்வாழ்வினையும்
துதியார்பிறதெய்வமஞ்சார்வெங்கூற்றுக்குஞ்சொன்மறைதேர்
விதியாரையீன்றதிருவுந்தியார்வடவேங்கடமாம்
பதியாரிருதிருப்பாதாம்புயத்தைப்பணிபத்தரோ. (கஉ)

இரங்கல்.

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவண்ணவிருத்தம்.

பத்தர்மனப்பதுமத்திலிருப்பவர்பற்பவிழித்துணையார்
கத்துகடற்றுயிலச்சுதர்மெய்ச்சுரகக்கிரியிற்கிளிகாள்
அத்தனநத்தியெனைப்பிரிவுற்றவராற்புதமைக்கணினீர்
தத்துறவிப்படியித்தனநிற்குதல்சற்றுநினைக்கிலரோ. (கங)

இரங்கல்—நேரிசைவெண்பா.

நினைத்துருகு மேங்கும்விழி நீரினுற் கொங்கை
நனைக்குமட லூர்ந்திடவு நாடும் - கனைக்குளனுள்
ஆங்கடத்தா னைக்கரசை யன்றுபுரந் தோன்கடவுள்
வேங்கடத்தா னைக்கலவா மின். (கச)

மேகவிடுதூது—கலிநிலைத்துறை.

மின்கொண்டு புனல்கொண்டு விற்கொண்டு வருகின்ற மிகு
கொண்டல்காள், தென்கொண்டல் வரவந்த தெய்வங் கரங்
கொண்ட சிலைகோலியென், பொன்கொண்ட விருகொங்கை
வரைமீது சரமாரி பொழிமுன்னமே, மன்கொண்ட டணிவெற்
பில் வாழ்மாயர் தார்கொண்டுவம்மின்களே. (கரு)

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

கள்ள நெடுங்கயல்போல் வள்ளையில் வந்துவிழும்
கண்கள் படைத்தமடப் பெண்கண் மயக்கமெனும்
வெள்ள மழுந்தெளியே னுள்ளமெழுந் தொருநின்
மென்பத வேலையில்வந் தின்புறு நாளுளதோ
தென்னுற மறைவேரோ வொள்ளிய பைங்காரோ
திரையடு சாயகனே திருமக ணாயகனே
உள்ளுநி லார்க்கிருளே நள்ளுநர் கைப்பொருளே
ஓங்கிய சிலையானே வேங்கட மலையானே. (௧௬)

தாழிசை.

மலைவளைத்து மதில்வளைத்த புரமெரித்த சிவனுடன்
மதரமூறு கழைவளைத்த மலையும்வேள் வளைக்கநீள்
அலைவளைத்த கடல்வளைத்த வவனிகாண வுடலமே
அறவளைத்த பிறைபிறைக்கு மனல்வளைக்க வெருவியே
முலைவளைத்த பொன்றுநல்ல மைவளைத்த கண்ணில்வீழ்
முத்தமாதர் திரள்வளைத்து மொழியுமந்த வம்பினால்
தலைவளைப்பு முடையளாகி யிவள்டதைத்த லறிவரோ
சக்கரத் திருக்கரத்தர் சர்ப்பவெற்பி லத்தரோ. (௧௭)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியச் சந்தவிருத்தம்.

அத்தன்மலர் மகன்மேவு கத்தன்வட மலைவாழு
மப்பனடி பணியாமலே
முத்திபெறன் முடியாது சித்தமிது பலநூலை
முற்றவறி தருநாவலீர்
மைத்தவரை யடுவீர வச்சிரதர னலர்வேதன்
மத்தகரி முகன்வேலின்வேள்
சத்திபதி யிவர்தாளி னித்தம்விழு நெறுமாறு
தத்தமது பதமீவரோ. (௧௮)

அம்மானை—மடக்குக்கலித்தாழிசை.

பதமலராற் சகடுதைத்த பரமர்வட மலைமாயர்
அதிகுணத்தி னிலமகண்மே லாசையுள்ளோ ரம்மானை
அதிகுணத்தி னிலமகண்மே லாசையுள்ளே ராமாகில்
மதிநுதலி னவளைவிட மாட்டாரோ வம்மானை
மாட்டார்மா தனைவிடத்தான் மாலானு ரம்மானை. (கசு)

தவம்—நேரிசைவெண்பா.

மானிடர்காள் கானிலுடல் வாடப் பெருந்தவஞ்செய்
தேனிடருற் றீர்பணிவெற் பெம்பெருமான் - தானே
தவமதுவே வீசுதுழாய்த் தாமனடி யுள்ளில்
தவமதுவே யாவருக்குந் தான். (உ0)

தவம்—கட்டளைக்கலித்துறை.

யாவருக்கிந்தப்பெருமையுண்டோதுகவின்னுயிர்காள்
மாவருக்கைத்திரள்பொற்குடந்தூங்கும்வடமலைவாழ்
தேவருக்காட்பட்டுவைகுந்தமேவித்தினமிருப்போர்
பூவருக்கம்பொருதாட்கிழ்ப்படுமெப்புவனமுமே. (உக)

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியச்சந்தவிருத்தம்.

புவன்முழு தும்பணியு மிருசரண புண்டரிகர்
பொறியளிகள் கிண்டு துளவார்
அவனிமகள் செங்கமல மகள்கணவர் தங்குகிரி
யழகுதிக ழுங்குழையில் வீழ்
குவளைவிழி யின்குறவர் மடமகளிர் செய்கைவிரல்
கொளுவிய கவண்கல் படவே
நவமணம் வழங்குசுர தருமல ருதிர்ந்துவிழு
நலமலி புயங்க கிரியே. (உஉ)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியச் சந்தவிருத்தம்.

கிரிச்சிலை யரன்பலி யொழித்தவ னெடுந்துயர்
கெடுத்தவ னடுஞ்சிலையே
தரித்தவ னிருங்கடல் கொதித்திட முனம்பொரு
சரத்தவ னுறைந்தருளூர்
மருக்கமழ் தடம்பொழி லுதிர்த்திடு பழம்பொழி
மதுத்திர டினந்தினமே
நெருக்தொறு நடந்தகல் வயற்றலை புகுந்திடு
திருப்பதி வளம்பதியே. (உ௩)

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

டதின்மர்செந் தமிழைப் படிக்கிலாய் கேளாய்
படித்தபேர் தாளையும் பணியாய்
எதிபதி சரணே சரணமேன் றுருகா
விசைக்கிலா யெமதுவேங் கடத்தைத்
துதிசெயா யிருந்த விடத்திருந் தேனுந்
தொழுகிலாய் வாழியென் மனனே
மதிநுத லலர்மேன் மங்கைநா யகனார்
மலர்ப்பதங் கிடைப்பதெவ் விதமே. (உ௪)

இரங்கல்—தாழிசை.

மேகந்தவழ் காவெவளர் நாகங்கமழ் பூவே
வேலைக்கெழு திரையேயறல் சாலத்திகழ் கரையே
ஏகும்பட லினமேகழி போகுங்களி யனமே
இளமைச்சிறு கயலேயென துளமிக்கது மயலே
ஆகந்துள வணிவார்தின மாகம்புவி பணிவார்
அணிபொற்றுகி லுடையாருயர் பணிவெற்பினை யுடையார்
மாகந்தர வருவார்வரு மோகங்கெட மருவார்
மனமுந்தெரி யாதேயவர் சினமுந்தெரி யாதே. (உ௫)

இரங்கல்—கொச்சகக்கலிப்பா.

தெரியாமன்மதுவருந்துஞ்சிறையளியைத்தூதுவிட்டேன்
தரியாழிவேங்கடமாறனக்கென்மால்சாற்றுமல்
கரியானங்கவன்கரங்கால்கண்கனிவாய்கமலமெனப்
பரியாநின்றவைக்கெதிரோடறந்தெனையுமறந்ததுவே. (உசு)

மறம்—தாழிசை.

மறவர்கொம்பை வினவவந்த விறைவதூத கேளடா
வடமலைக்கு ணின்றமாயர் தடமலர்க்க ணருளினால்
விறல்பொருந்து மெங்கள்கொம்பு வீறுமுங்க ளானையின்
வெண்மைபெற்ற கொம்புபோல விற்பதோ வரைந்திடும்
திறனடைந்த கொம்புபோல விதியினெவ் வினத்தையும்
சேருமோ சுவர்க்கலோக தாருவிட்ட கொம்புபோல்
அறமிகுந்த சுரர்தொடப்பொ றுக்குமோசொ லரசர்பால்
ஆனகொம்பு தண்டிகைக் கமைந்தகொம்பு சரதமே. (உஎ)

நேரிசைவெண்பா.

சரதங் கதிபெறலாந் தாலத் துயிர்காள்
விரத மவனை நினையீர் - அருமறையும்
செப்பரிய வெண்ணத்தான் சேடகிரி யான்கரத்தில்
அப்பரிய வெண்ணத்தா னால். (உஅ)

கட்டளைக்கலித்துறை.

ஆலத்தரங்கத்தைவாய்ப்பொறிப்பாம்பினிலக்கையிலே
போலத்தரங்கத்தைவீசாழியிற்றுயில்புங்கவர்பைங்
கோலத்தரங்கத்தைநன்மகற்கேபண்டுகூறுமுத்தி
நூலத்தரங்கத்தையேந்தவென்வேங்கடநோற்றதுவே. (உக)

கலிவிருத்தம்.

கோற்றவர் மேலரு ளேக்கம் வைக்குமால்
வீற்றிருந் தருள்பணி வெற்பின் மாதரீர்

தோற்றிரு குழைவலி சொலப் படாதுகட்
கூற்றடுத் தொறுநிலை குலைந்த வல்லவே. (௩0)

மதங்கி—பதினான்குசீர்க்கழிநெடில்
ஆசிரியமடக்குவிருத்தம்.

அல்வளை சோலைப் பணிச்சிலம் படிகள்
அடியர்நம் பணிச்சிலம் படிகள்
அநுதினம் பாடித் துதிக்குமா தங்கி
யனமணிப் பூணின்மா தங்கி
எல்வளைக் கரத்தாற் பற்றுவ துறைவாள்
இவட்குநேர் குலிசபா ணுறைவாள்
இயம்பம் புவது தக்கதொத் தோதி
யிருளெனத் தக்கதொத் தோதி
வில்வளை வழிக்கு மிருகரும் புருவம்
மேனியோ வொருகரும் புருவம்
வேட்கையாற் பாடுஞ் சுரஞ்சரி காமா
விழிக்கொரு விதஞ்சரி காமா
நல்வளை கெழுவெண் டாளமே யாம்பல்
நலமலி செவ்வித ழாம்பல்
நகுகபோ லங்கள் வலயதர்ப் பணமே
நடிப்பது மிலயதர்ப் பணமே. (௩௧)

இரங்கல்—அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

பணம்பரப்புநாகணையிறைவனுலகெலாம்பரவுவேங்கடத்தான்பூ
அணங்கினைப்பிரியாதமால்வேதனையருளினனென்பாரால்
வணங்குவிற்பொருவாறுதற்பவளவாய்மாதரீரம்மாலைத்
தணந்தவிக்கொடிமனத்தெழுமாலும்வேதனையளித்ததுதானே

நாரைவிடுதூது—கொச்சகக்கலிப்பா.

தானே தனக்கிணையார் தன்வேங் கடவனுடன்
கோனேரி வாழுங் குருகினங்காள் கூறுமினே

மீனே யெழுதுகொடி வேளெடுத்த வாள்போல
வானே யெழுமதியென் மாமதியுண் டோடுகையே. (௩௩)

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

கைத்திகிரி யானு மத்திகிரி யானும்
கார்வண்ணத் தானு மோர்வண்ணத் தானும்
அத்தியணை யானுந் துத்தியணை யானும்
அருந்தண்டத் தானும் பருந்தண்டத் தானும்
சித்தமரு வானும் பத்தமரு வானும்
சிறக்குமன்பு ளானும் பறக்குமன்பு ளானும்
மத்துவரை யானு மத்துவரை யானும்
மாகமலை யானு நாகமலை யானே. (௩௪)

இரங்கல்-பன்னிருசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

மலையக் குவடு தனைமுலையா
மலையிற் பழித்தா ளெனப்பகைத்து
மதன்றே ராக்கி யனுப்பவரு
மந்தா னிலமக் கிரிப்புலிபால்
கொலைகற் றெழுந்திவ் விவளுடலிற்
குடிகொ ளுயிர்ப்பு தனைக்கூட்டிக்
கொள்ளச் சுடரைப் பரப்புசெம்பொற்
கோலச் சிறுசா ளரவாசற்
றலையிற் கதவு திறந்துந்
தன்மை குறித்துன் றிருவணையைச்
சாலத் துதிக்கின் றனளிவளைத்
தழுவா விதமென் னிதுமொழிமோ
சிலையைச் சிலைவா ணுதலாக்கச்
சிறிய துகளை விடுகடவுட்
செந்தா மரைத்தாட் பெருமாளே
சேட கிரிவாழ் பெருமாளே. (௩௫)

இரங்கல்—கட்டளைக்கலித்துறை.

மாளவிராக மளிபாடியாடுமுன் வாசத்துழாய்த்
தோளவிராகத்தி லென்கொம்பனுண்முலை தோய்வதென்றே
நீளவிராக மணிப்பாம்பணைதுயி லித்தமலர்த்
தாளவிராகவ னந்திருவேங்கடர் தங்கத்தனே. (கசு)

நேரிசைவெண்பா.

தங்கா கத்தானத் தானத்த னன்மயமா
தங்கா கத்தானத் தானத்தன் - துங்க
வடமலையா னந்தமிறை வன்சிலையான் சேக்கை
வடமலையா னந்தமிறை வன். (கஎ)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

இறைவனிவ னெனவறியா திந்திரதேவர்
இணையடியைப் பணிக்குதிரி யேழையீர்நான்
அறைவனிது திடமாதி மூலமேயென்
றத்திறுகன் மதயானை யழைத்தபோதஞ்
சிறைவனசத் திருமுகப்புள் ளூர்ந்துவந்து
செகமறியும் படியளித்த தேவதேவன்
நறைவனவஞ் சனகிரிமா லல்லனோகாண்
நாடியவற் றொழுதுகதி நண்ணுவீரே. (கஅ)

இரங்கல்—கட்டளைக்கலிப்பா.

வீரமேவுஞ் சுடர்நேமி யெம்பிரான்
மேவும்வேங்கட வெற்பினிற் காகோள்
சூரமேவ வருநெட் டுயிர்ப்பையுங்
கோலமேவு குலவண்டு விழ்கையும்
தூரமேவிய கண்களும் பெற்றவா
ரம்முலைக்கொடி யாரலர் தூற்றவே
வாரமேவிநீ தின்றிரோ போலவே
வாஞ்சித்தீர்கொல் மணவாளர் தம்மையே. (கசு)

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மையார் தருகண் ணுடுவா ரமைவின்
மணிசக் தனமா வனமும் பெறலால்
ஐயா விவள்வன் முலையுன் மலைநே
ராய்நின் றதுநீ யணையத் தகுமால்
நெய்யா ரளகச் செய்யாள் கணவா
நிறைவெண் மதிகாய் நிலவின் பணிலக்
கையா யருளைச் சொரிசெங் கமலக்
கண்ணு திருவேங் கடமா யவனே. (௬௦)

சம்பிரதம்.

பன்னிருசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மாயமல நெடியகரு வேலையொரு கைக்கொள்வன்
வரைவிரற் றலைநிறுவுவன்
வன்னிநடு நிற்பனம் புவிபுவி வரப்புரிவன்
மாவினது கொம்பினுடனு
காயமிக நாறலரி தன்னிலே யோடுதடி
காட்டுவன் னொருநொடியினிற்
கனலோக முழுவது முடைப்பனன் டமுமுண்டு
கக்குவன் னிவைவித்தையோ
வேயனைய தோளினயி ராணிகலை வாணிபணி
வெற்பில்வரு கலியாணியும்
மென்பாணி வனசநிகர் செம்பாணி தொழுதுசொரி
விரிமலர் படக்கன்றுதாட்
சாயன்மட வன்னநடை நங்கையலர் மேன்மங்கை
தன்கணவர் வடமலையில்வாழ்
சக்கிரமா லடிதலையில் வைத்திடா வொருகடவு
டன்னையினி முன்விடுவனே. (௬௧)

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியச்சந்தவிருத்தம்.

நிறுத்திடு படைக்கல வரக்கர்மடி யப்பொரு
விறற்சிலை வளைத்தடு பிரான்
வடிக்கணை விழித்திரு விருக்குமக லத்தினன்
மணிப்பணி வரைக்கண் மடவீர்
கொடிக்கிளி யெனச்சொலு மதுத்தம நசுப்பெழில்
குறித்தறவும் வெட்கி யலவோ
இடிப்புய லகத்தெழு தடித்திலகு மப்புய
லிடத்தினி லொளித்து விடலே. (சஉ)

இரங்கல்—எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

ஒளிக்கும் குமக்கொங்கை யுளத்தின் மடவீர்
உத்துங்க சிகரத்தி னொருசேட கிரிமால்
அளிக்கும் பெருங்காம முள்ளத்தி னுள்ளே
அடங்காது கொல்லோ விடங்காலும் விழியாள்
கிளிக்கும் குயிற்குஞ்சி கிக்குஞ் சகிக்கும்
தேத் தளிக்கும் கபோதத் திரட்கும்
களிக்கின்ற பூவைக்கு மன்னங்க ளுக்கும்
காருக்கு மேசொல்லு மொரொன்சொ லாதே. (சங)

கைக்கிளை—மருட்பா.

தேக்கோதை வாடுமிரு சீறடிகள் பார்கூடும்
பூங்காவிக் கண்ணிமைத்துப் போராடும்—ஈங்கிவையால்
ஒப்பிலா வேங்கடத் தறையிவர்
அப்பருண் டுமிழ்ந்த வலர்பூக் கொடியே. (சச)

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

கொடியொன் றிரண்டு சிலைமன்றல் கொண்ட
குமிழொன் றிரண்டு கலசூர்
வடியொன் றிரண்டு குழைகின் றிலங்கு
வளையொன் றிரண்டு திரள்வேய்

தொடியொன் றிரண்டு வனசஞ் சுமந்து
துளவன் புயங்க கிரிவாய்ப்
படியொன் றிரண்டு தளிர்கன்ற வின்று
படர்கின்ற தின்ப முறவே.

வண்டு—கட்டளைக்கலித்துறை.

உறவே நுமக்குவன் டீர்வேங்க டேசர்பண் டேதியால்
நிறவே யனையசொன் மானிடை போம்படி நித்தமுலை
அறவே பருத்தன நீரோ குழலி லமர்ந்துமலர்
நறவே யுண்டாடுகின் றீர்நடுப் போம்விண்டு நண்ணுவிரோ. ()

நேரிசைவெண்பா.

நண்ணா ரிலங்கையடு நாயகனே வேங்கடக்கார்
வண்ணாவுன் காற்று மனையிற்பாய் - கண்ணனை
உட்டிருப்ப மாட்டாது நிற்கின்று ளுன்னையிவள்
விட்டிருப்ப தெந்த விதம். (சஎ)

குறம்.

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியச்சந்தவிருத்தம்.

எந்த விதங்களு மறிகுற மகனா
னிங்கெதிர் வந்தினி யெனதித மொழிகேள்
அந்தமு றந்தனி னவமணி கொடுவா
வன்பி லணிந்திட வழகிய கலைதா
கந்த மிகுந்த தனந்தனில் குறியே
கண்டன னின்றலர் கமழ்குழன் மடவாய்
வந்தெவ ருந்தொழ வடமலை தனில்வாழ்
வண்டுள வன்றின மருவுவ னுனையே. (சஅ)

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

உனைக்கருதா மனமுமுனைத் துதியா வாக்கும்
உனைவணங்காத் தனுவையுங்கொண் டேகிற்பாவம்

அனைத்தினையு மீட்டிவனின் றெழிக்கப் பூமேல்
அயனுறு மமைபாதா லந்தப்பாவம்
எனைத்தொடரா விதம்பாலித் தருள்வோ னீயே
எனத்துணிந்துன் சரணடைந்தே னெனையாள் கஞ்ச
மனைக்குளுறை கொடியலர்மேன் மங்கை நாதா
வடமலையா யருள்பெருகி வழிகன் றுனே (சக)

மடக்கு

என்சீர்க்கழிநெடில் ஆசிரியச்சந்தவிருத்தம்.

கண்ணன் வேங்கடக் கண்ணன் வண்ணமே
கரிய வன்சொலற் கரிய வன்றிருப்
பெண்ண னெங்களன் பெண்ண னந்தன்வாழ்
பெருமை நாட்டகப் பெருமை நாட்டமான்
மண்ணி ழைத்தன மண்ணி ழைத்திடா
மாசி லம்புதாண் மாசி லம்புயம்
பண்ணின் மாவுணப் பண்ணின் மாகுழற்
பாவை புண்மையே பாவை புண்மையே. (௫0)

பதினான்குசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மையவாங் கோல விழிமழை பொழிய
வார்தனச் சையமேற் பாவி
மணங்கமழ் நறுங்குங் குமஞ்செழுஞ் சாந்த
மான்மதங் கலந்துகொண் டொழுகும்
தய்யரீ ராறங் இருமருங் கோடச்
சழிக்குமவ் வாற்றிடைக் கிடந்து
தலங்குசி ரங்கம் படைத்தொரு தடியிற்
சுருங்கிடை மடந்தைமா லாகி
ஐயகே ளுனைநே ரொத்தனன் கரத்தி
லாழிசங் கணிந்திடாக் குறையோன்

றக்குறை யகற்றி யணைந்திடத் தகுங்கா
ணங்கண்வா னரசுவா நோக்கி
வெய்யவாய்த் தறுகட் கடும்புலிப் போத்து
வெகுண்டெழுந் தடிக்கவா லடிக்கும்
வேங்கடா சலத்தி லோய்குமா தவனே
வினையிருள் சிக்குமா தவனே. (ருக)

எண்சீர்க் கழிநெடில் ஆசிரியச்சந்தவிருத்தம்.

ஆதவன் கதிர்கூடப் பாதவந் தீசுரத்
தழல்பொரு தண்டகன் னிழல்பெரு திடருறும்
சீதமென் குமுதவாய் மாதினிக் காண்பைநீ
சீர்த்தியாழ் வார்பெருந் தீர்த்தமுந் தூவியும்
மாதர்தன் மணர்கொயுந் தாதலர்ச் சோலையும்
மஞ்சுலா வுங்குவட் டஞ்சன சலமுமப்
பூதரந் தனில்வருஞ் சீதரன் கோயிலும்
பொருவில்சூ ளிகையுமா தெருவுமா ளிகையுமே. (ருஉ)

கட்டளைக்கலித்துறை.

மாளிகைசுற்ற முடன்பிறந்தார்பெண்டிர் மக்கள்பொருள்
சாளிகைபொற்கலன் பட்டாடைவாகனந் தையனல்லார்
கேளிகையாகிற்கும் வேம்பெனச்சேட கிரித்தனிவில்
லாளிகைநேமியன் றுள்கரும்பாமுத்தி யாசையர்க்கே. (ருங)

நேரிசைவெண்பா.

கேசவனார் சேட கிரிமாயர்க் கைந்துமுகத்
தீசனதி பத்த னிதுசரதம் - நேசமிகச்
சங்கங்கை யேந்துமவர் தாட்புனலென் றேதினமும்
அங்கங்கை சென்னிவைத்தா னால். (ருச)

கார்காலம்—மடக்கு

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

ஆலுமணி யங்கன்வன மலர்முலைபாய் காலம்
அவர்பிரிவா லங்கன்வன மலர்முலைபாய் காலம்
கோலமயி லினம்பரிவிற் குனித்துவருங் காலம்
கொடியேன்முன் மதன்பரிவிற் குனித்துவருங் காலம்
நீலமணி வண்ணனம்பொ னிழனுக வரையின்
நெடுமோயன் மலர்ச்சோலை நிழனுக வரையின்
சாலுமழைக் குலம்பலகாற் றடித்துவிடுங் காலம்
தழற்கொழுந்தா மெனப்பலகாற் றடித்துவிடுங் காலம். ()

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

காலஞ் சென்றதெழுங் கனகனை திரைமேவிக்
காய நெகிழ்ந்ததிணைக் கண்க ளிருண்டதடஞ்
சூலங் கொண்டுபொருந் தோணம னுள்வருமுன்
துணையா வினிமனமே நினையா யநுதினமே
மாலம் பங்கயனான் மலரி லணைக்கலர்மேன்
மங்கைதன் மணவாளன் வன்ளே வணிதோளன்
ஆலந் தண்டளிர்மே லறிதுயில் கூர்பெருமாள்
அஞ்சன வெற்பமலன் கஞ்ச மலர்ப்பதமே. (ருசு)

மடக்குக் கட்டளை மண்டலக்கலிப்பா.

பதத்தளர்ந்தது முப்புவ னத்தையே
பண்டடைத்தது முப்புவ னத்தையே
வதைத்ததேற்றிடு மாத்தா னவரையே
மழைக்கெடுத்தது மாத்தா னவரையே
இதத்தபூப்பெண் மணக்குமந் தாரமே
மிக்குநாட்டு மணக்குமந் தாரமே
நிதித்தநிக்கறி வேங்கட னாகமே
செக்கண்மாலிடம் வேங்கட னாகமே. (ருஎ)

௯௬—அடி நேரிசை ஆசிரியப்பா.

நாகக்குலத்திறைகாய்கதிர்மணிச்சூட் — டாயிரந்தலைக்கொ
ளுமாயிருஞால—மகள்சிரமச்சிரந்திகழ்சுடர்க்கற்றை — வனைந்
தவம்மௌலியினனந்தலைநாயக — மரகதமணியெனத்தனையி
னிலைஇய — ஒங்குபொற்குடுமிவேங்கட.க்கனகத் — தூவியினுப்
பன்மேவியமாயோய் — நலமணிமலைபானிலவுபோர்த்தென்ன
—வாலிதிற்கருப்புரமேலணிந்தந்த—வியன்மலைகமஞ்சூற்புயல்
படிந்தாங்குப் — புழுகொழுகப்புனையழகியவடிவோய் — செங்
கட்பகவவெங்கட்கிறைவ — ஒருதனியாழிப்பரிதிவிட்டகலா —
விரிகதிரொளிநிற்பிரிகிலாதிருக்கும்— மடந்தைநுண்மருங்குலுட
ங்கப்பணைத்தெழு—கொங்கையினலர்மேன்மங்கைதன்கணவ—
நிற்பணியடியார்பொற்பதத்துகட்கும் — நிகரலென்குற்றமிகவு
ளசிறியேன் — நான்மொழிபுன்சொலுங்கேண்மதியத்தை —
முடிவிலாவொருநின்னுடைமையாய்நிற்கும்—இருவகைச்சத்தி
னிருமலநித்திய—வித்தையுமாகியசுத்தசத்தொன்றை — நித்த
ருமுத்தருமைத்தகட்குவளைத் — தேவியர்நீயுமேவிவீற்றிருக்கப்
— பேரிடமாக்கினையோருமற்றதற்கு — வேறுபாடுடைத்தாக்
கூறுமிச்சிரசத்—தொன்றினையாலம்வித்தொன்றுமுளைத்துக்—
குருஉத்தழைகொம்பாப்பருஉச்செழுமரமாப் — பரிணமித்தெ
ன்னவரிசையினேழா—விரியப்படுத்திவரன்முறைதோன்றிய—
அஞ்சினுமையைப்பஞ்சீகரணம் — பண்ணியிலஞ்சியுளன்ன
லங்கமல — உருப்பொலன்ருதாற்றிரட்டுபுநடுவணில் — சீரிய
பொகுட்டுமேருவிற்றிசைமுகன் — உடைமகற்சேர்த்திப்படை
யெனவிதித்தாங் — கிலகுமவற்கொண்டுலகுமவற்றுட் — சாற்
றெருநால்வகைத்தோற்றத்தோரேழ் — பான்மைப்பிறப்பினுன்
மத்திரளையும்—வருவித்தவற்றையுரியதானத்தில் — இறைகொ
ளவைப்பித்துறைதருமவைதாம் — மிகப்புரிகருமமகத்தினும்பு
றத்தினும் — மரீஇயுணர்ந்துட்பரீஇயவனந்தம் — உயிர்கட்கின்
பமுஞ்செயிராரனந்தம்— ஆருயிர்தமக்குக்கூர்தருதுன்பமும்—

வட்டித்திருவிளையாட்டயர்கின்றனை—அடுக்குநின்மாயையைக்
கடக்கவல்லவரார்—அவ்வுயிர்க்குழாத்தறவெவ்விய தமியெனும்
—நின்னருள்பெறுமேயிக்கிலக்தன்னில் — கன்றுளனொருவ
னெண்ணிலாவேடம்— எடுத்துப்பலவிதநடித்திடல்பொருவ—
இனைத்தெனக்கூத்தரினைத்தளக்கொல்லு—உருவமெடுத்தும்
பருவம்வந்தழி—விடுத்தும்பெருநரகடுத்திடருழந்தும் — நலங்
கறங்கென்னவலமந்தின்னணம்—சாலவுமெய்த்தனென்போலு
மிப்பிறவிப்—பௌவப்பரப்பையெவ்விதங்கடப்பல்—அனுதின
மவிச்சையெனதுணர்வழித்தலே — ஒழியாததனுலெழுமகங்கா
ரம்—யானெனதெனும்பற்றுறுதியற்றுதல் — விடாததனுனே
கெடாதுறுமவாவும்—எனக்கிதுவேண்டுமெனக்கருதுந்திறன்—
உதவுதறவிராததனுறைந்துப்—பெருகியவிழைவுபொருள்களி
பிறகப்—பிடிக்கப்புரிதல்விடுத்திடாததனுன்—மறுதலைகடந்து
கதுமெனமூளக்கும்— வெறுப்புத்தீத்தொழின்மறுப்படுமாற்ற
மும்—வருவகையிழைத்தலொருவாதிவற்றுன்—விளையிருவினை
யும்வளர்விதமகலா—அவிருவினையான்மாயத்தனுவும் — தோற்
றியதனுவான்மாற்றருவினையும் — விதையாற்றருவுந்தருவால்வி
தையும் — வருவனபோலவராதிராவொருதலை — நோக்கியவற்
றைநீக்கவென்வயமோ— எத்தவறிழைக்கினுங்கத்துகின்கிணிக்
கால் — மழலையங்கனிவாய்க்குழவியையீன்ற — தாயளிப்பது
போலளித்தருள — உள்ளங்கருதியென்கள்ளமனத்தைத்—
திருத்திமற்றுன்பாலருத்தியுண்டாக்கிப்—பற்றலர்ப்பொருமுன்
வெற்றிக்கொடியெனும் — புயமெருசோலிவயல்சுற்றுடுத்த —
பூதூர்தனில்வருமாதவத்தெதிபதி— தனதாளையின்வழிநனிமிக
வொழுகும்—வரவைணவத்தில்விரகிலாவெலையும்—கூட்டிநற்
குரவர்தாட்டுணைபணிந்தவர் — தம்மாலயத்துமும்மையாகார
மும்—படைத்தலர்வருளத்தொடைப்புயமாறர்—சொற்றசெந்
தமிழ்மறைகற்றுணர்ந்தழகிய — உன்னுலந்தெரிந்துகொண்டெ
ன்னையிகழ்ந்த — சிலைக்கரியகலறுப்பண்ணும் — படிசெய்

றுபலனடையநீகைக்கொள்— டெனக்குபாயமுமாயெனக்கு பேயமுமாய் — இருந்தொன்றுறும்வருந்தாவிதமெனே — ஆட் கொளவேண்டுமோட்கொண்டனையேல் — சனனமுமரணமும் வினைகளுநீங்கக் — கரைபொருவிரசையுங்கடந்து — பரமாமு னதுபதத்தடைகுவனே. (ருஅ)

கட்டளைநிலைக்கலிப்பா.

அடையமுண்டக மேலோன்பதத்தினுக்
கப்புறத்தி லருந்தூர மாழியம்
படையன்வாழ்பத மென்றுரைப் பீரவன்
பத்தருக்கப் பதநெடுந் தூரமோ
தடையிலாதிபங் கூப்பிடு காலையத்
தலைவன்வந்தமை தானறி யீர்கொலோ
கொடையிலோங்கிய வேங்கட மாயவன்
குடிகொள் வைகுந்தங் கூப்பிடு தூரமே. (ருகூ)

பாண்—அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

தாரச்சுரங்கள்பலசேர்க்குந் துணைநீயறிவாயெனவிருந்தேன்
வீரத்திருவேங்கடத்தானைவேற்றுமடவாரொடுசேர்த்தாய்
ஈரக்கடல்சூழுலகிலுனக்கிணையார்பாணவிமிழிசைக்கோல்
ஆரப்பெருஞ்சீர்வீணைவிடுத்தகன்றிவ்வீணையடுத்தாயே. (சுo)

தழை—கட்டளைக்கலித்துறை.

அடுத்தாரை வாழ்விக்கு மால்வட வேங்கட மன்னமன்னு, கொடுத்தாய் நறுந்தழை யான்கொண்டு போந்து கொடுத்தவு டன், எடுத்தாள் விழியொற்றிக் கொண்டாள்கைப் போதினெ டீர்ந்தழைமேல், படுத்தாணிற் கும்பொழு தோர்கொம்பு போன்றனள் பான்மொழியே. (சுக

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

மொழியமு திறழ்நிக் கனிமுலை யிளநீர்
முகமதி யார்க்குஞ் சகமதி யயனுன்
விழிவிட மனங்கல் லாகவே விதித்தான்
விருத்தமா வுலகை வருத்தவே யலவோ
வழிவழி யடிமை யெமைக்கொளு மலர்மேன்
மங்கைதன் கணவன் செங்கணெம் பெருமான்
தெழிபுன லருவி மழையென முழங்குந்
திருமலை மீதே வருமட மாதே. (சுஉ)

நேரிசைவெண்பா.

மாதவத்தோர் சிந்தையுமா மாமறையி னுச்சியுமாம்
கோதகற்று வேங்கடப்பொற் குன்றமுமாம் - சீதமலர்
எட்டக் கரத்தா னிடந்திகழ்சங் கோன்குருந்தை
எட்டக் கரத்தா னிடம். (சுஙு)

கலிநிலைத்துறை.

இடங்கொண்டு வடமலைவாழ் பெருமானை வளர்த்தகுலத் தே ந்திழாய்மோர்க், கடங்கொண்டு திரியிடைச்சி யல்லீசி சிற்றி டைச்சி கண்டாய்சும்மாக், குடங்கொண்டு திரிவை யிப்பால் வாராயவ் கன்றிலைக்கை கொடுகெட்டாயால், திடங்கொண்டு திரியாமன் மயக்குறமென் பசுவருத்தஞ் சிந்தியாயே. (சுச)

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியச்சந்தவிருத்தம்.

சிந்திப் பனவுந் துதிசெய் வனவுந்
தெரிசிப் பனவுந் தரிசற் றிடவே
வந்திப் பனவும் பூசிப் பனவும்
வாஞ்சிப் பனவும் யாஞ்செப் புவமால்
தந்திக் கிமையோர் பந்திக் கினியன்
மூழிக் கருள்கூ ராழிக்கடவுள்

கந்தித் தெழுபூ வுந்தித் திருவேங்
கடமால் சரணத் தடமா மலரோ. (சுரு)

வேற்றொலி வெண்டுறை.

மாமலயத்தென்றலந்தேர் வருமாரன்கணையாகிவந்தநான்கு
பூமலந்தென்னிறையொடுநாண் புத்திதுயில்கொண்டனவப்
[போர்வேணிலத்
தேமலனையின்னம்விடாத் திறத்தாலிவ்வுடலினுயிர்
தாமதித்துநின்றதுபூந் தழைசிறையமடநாராய்
கோமுனைவேற்றுருபதன்றன் கொடிமானங்காத்தபிரான்
வேமணிகளுதிர்சாரல் வேங்கடத்துமாயனுடன்
நீமொழிந்துவாராயென் னிலையெல்லாந்தெரிந்துகொண்டே.

குறளடி வஞ்சிப்பா.

கொண்டற்றிரள்குழனினையொடும்
வண்டளவினமணிநகையொடும்
கமழ்தோன்றிகள்கைத்துணையொடும்
இமிழ்வண்டினமிணைநோக்கொடும்
தழைசிறைமயில்சாயலினெடும்
எழுகோபநல்லிலவிதழொடும்
இகல்பான்மையினிவையாவையும்
மகிழ்வாயிவண்மால்வேதனை
காணியநனிகணங்கொண்டன
தானுவையடுசேரமாரனும்
எதிர்வந்தனனெய்வானினி
வெதிரைப்பொருமென்றோட்கொடி
படுவெம்படர்பார்க்கிலமெனச்
சுடுவெங்கதிர்சொரிஞாயிறும்

நகைபெழுமுகநாண்மதியொடு
பகையாகியபனிமதியமும்
வருவானகமறைவுற்றன
வெருவாமணிவிடவரவமும்
வன்னச்சுடர்மணிகான்றிடக்
கன்னிப்பிடிகடமாவினைத்
தழுவுறவடுதான்வள்ளுகிர்
உழுவைக்கணமுழையிற்புக
ஒழியாதெழுமுருமதிர்தரு
மழைகாளிதமடவஞ்சியர்
காதற்பிரிகாளன்றயர்
காதற்புரிகலையைப்பிரி
பிணைபோன்றனன்பெருமதர்விழி
இணைதாம்புனலிலகியகதுங்
குங்குமமுலைக்குவடிழிதர
இங்கொருதனியிக்கோற்றொடி
மனமுருகுபுமயலான்மிக
இனைகின்றனளிங்கீர்மையை
வனசுறமலர்மறைதுய்மணி
இனமுடிபுனையிமையோர்தொழு
மெல்லடியவர்மேன்மங்கைநல்
வல்லியையனைவன்றேட்பனை
ஒருகற்பகமுறைதருமொரு
திருவேங்கடத்தின்கிரியினில்
விறல்செழுமுனைவேன்மன்னரும்
அறிகிலரவர்க்கார்சொல்குநர்மடவீர்
எக்கிதற்கென்செய்துமியம்பீர்
ஆக்கவர்பொருணசையகல்குநரலரே. (௬௭)

இரங்கல்--மடக்குவிருத்தம்.

அலர்வாய்த்தேனேபடர்படவே அலர்வாய்த்தேனேபடர்பட
அகலும்பாணிவளையினமே அகலும்பாணிவளையினமே [வே
சலமுற்றுவிக்குருகீரோ சலமுற்றுவிக்குருகீரோ
சாலக்கொடியாரம்மணலே சாலக்கொடியாரம்மணலே
சிலைமாறுஞ்சுவடமலையான் சிலைமாறுஞ்சுவடமலையான்
சேர்த்தண்டுளவன்மாவுரத்தான் சேர்த்தண்டுளவன்மாவுரத்தா
மலைபூவரிக்கணம்பாறே மலைபூவரிக்கணம்பாறே [ன்
மானச்சுறவேபாலனமே மானச்சுறவேபாலனமே. (கூஅ)

கலிநிலைச்சந்தவிருத்தம்.

அனமேல்வரு மயனுருறை யலர்நாபியி னெடுமால்
வனமேமலர் நறைகால்வட மலைவாழ்களி மயில்காள்
புனமேவரு மடவாரொடு புரிவாலொரு தமியேன்
மனமேகின தவர்போகின் வழியேதுனா செயுமே. (கூகூ)

சித்து—அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

உளையாலு மனத்தாலு மளக்கொணாத
வோங்குபுகழ் வேங்கடவ னுபயபாத
மளையாசைச் சித்தரியாம் பலநாகத்தில்
வலியவா கியவிரும்பை வருவித்தந்தக்
களையாத விரும்பையெல்லாம் பணங்களென்னக்
காண்பித்தோ மவ்வளவோ கரியதோலும்
அளையாரத் தோலுடுத்தோ னிடமுங்கைக்கொ
ளச்சிலையு மாதங்க மாக்கினோமே. (எ0)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

ஆக்குந் தொழிற்கு விரிஞ்சியைவைத்
தழிக்குந் தொழிற்குச் சிவனைவைத்து

காக்குந் தொழிஞன் கைக்கொளருட்
கடவுள் வடவேங் கடங்காணு
நோக்குங் கருதா மனமுமொரு
கொடிப்போ தேனுங் குதியாத
வாக்கும் பணியாத் தலையுமுள
மனித ரிருகான் மாடுகளே. (௭௧)

கொச்சகக்கலிப்பா.

மாடாக விழற்றுசெழு மானுகத் தவச்சிறிய
பூடாகக் குழைத்தநறும் புதலாக வழிப்படுமோர்
ஓடாகப் பெறுவமெனி னுயிர்காணற் கதிபெறலாம்
வீடாகத் திருநெடுமால் வீற்றிருக்கும் வேங்கடத்தே. (௭௨)

களி—தாழிசை.

வேங்கடக்கிரியி லோங்குசெங்கனெடு
மேகம்வீறுகரு ணாகரன்
விமலமானபத கமலமாயனதி
விருதுபாடிநடி களிபரோம்
நாங்கள்மெய்ச்சமது வுன்னவுன்னமிக
நல்லபுத்திதரு மல்லதோர்
நாளுமெங்களை மயக்குமோசமனை
ஞானிகாளினிது கேண்மினோ
எங்குமத்தியினின் மாமுளைத்ததுவு
மிக்குமீதுபல வாசெலாம்
இருப்பதுங்கருவ னக்கொடித்திர
ளெழுந்துவிண்ணிடை பறப்பதும்
நீங்கலற்றபசு பதிகுளத்திலெரி
நிற்குமாறுமொரு காலுளோன்
நித்தமேருவலம் வருவிசித்திரமு
நிச்சயஞ்சொரு மறிவரே. (௭௩)

நேரிசை வெண்பா.

அறியுமவர் நம்மடிக ளாவார் மனனே
நறியவனச் சேடகிரி நாதன் - செறியும்
இசைக்கண்ணன் கத்தாவி லங்களிக்க வூதேழ்
இசைக்கண்ணன் கத்தா வென. (எச)

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியச் சந்தவிருத்தம்.

எனதுவினை யிருள்செற்ற பரிதியிது மதிவட்ட
மிதுவெனவில் விடுசக்கிர நிலவேகால்
கனதவள வளைகைக்கொள் பரமனுறை பணிவெற்பர்
சனகவினை யிதயத்தி னினையாரோ
முனநறிய மலர்மெத்தை தனின்மருவு பொழுதொற்றை
முகமுழுது மளகத்தின் மறைநீரால்
மனமுருகி நிகரற்ற சசிவலய முகிலுக்குள்
மறைவதென வவர்சொற்ற மொழிதானே.(எரு)

வஞ்சித்துறை.

மொழிமறை முடிமேல்
எழுமுத லதுவே
செழுவட மலைவாழ்
விழுமிய பொருளே. (எசு)

ஊசல் — எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

பொருளலா விடயத்தைப் பொருளென் றெண்ணிப்
போவதுமீள் வதுமாயெப் பொழுது மாடும்
மருளுலா மனவூசல் சுத்தஞ் செய்து
மாறுது வளர்பத்தி வடத்தைப் பூட்டி
இருளிகோர் குழலிலப்பெண் ணலர்மேன் மங்கை
இருவரொடு மேயதன்மே லேறி வீறும்

அருளினான் மெள்ளவசைத் தாடீ ரூசல்
ஆதிவட மலைமாய ராடீ ரூசல். (௭௭)

கட்டளைக்கலித்துறை.

ஊசலையொத்துத் தனத்தாற்றுயல்வரு மொண்மருங்குற்
கோசலைதன்சுதன் வேங்கடவாணன் குணகணமாம்
விசலைவெள்ளத் தழுந்தறிவாளர்க்கு மீண்டுமுண்டோ
காசலைசேர்குழற் பெண்ணிலத்தாசைக் கனவழுக்கே. (௭௮)

பிச்சி—கட்டளை நிலைக்கலிப்பா.

அழுக்கி லாநுதல் வெண்பிறை யாகநீ
றணிந்த தன்றி பிரசித வெற்புரு
கொழுக்கு வான்முலை கொள்ளவெண் ணீற்றைநீ
கொட்டி னாலுன் கொடியிடை தாங்குமோ
பழுத்த காவித் துகிலுடுத் தோர்கதை
பற்றி நிற்பதென் பற்பல மாதவர்
ஒழுக்க மாற்றுதற் கோவேங்க டேசனா
ரொலிவி ழாக்கண் ளேங்களி பிச்சியே. (௭௯)

கலிநிலைத்துறை.

பிச்சி தருங்குழ லாயிது வெண்மதி பேசாய்பார்
மெய்ச்ச மரங்க முகந்து துயின்றொளி மிகுமாடக்
கச்சி யிருந்தர காசல நின்றருள் கனிவாயெம்
அச்சுத ரெம்மன மேவிய மாசையை யறியாரோ. (௮0)

கலிநிலைத்துறை.

ஆர்படைத்த கணையையலைத் தகன்றமதர் நெடுங்கண்மலை ரணங்கின்மார்பா, ஏர்படைத்த வடமலையி லெமையிருத்திப் போனவர்தம் மெதிர்ப்படாதோ, சீர்படைத்த மடப்பேடைக் கிளையருத்துங் கருத்துடைத்தாய்ச் சேண்மீன்கௌவு, கூர்

படைத்த வாயுடைத்தாய் விரைந்துவருங் கருங்கால்வெண்
குருகுதானே. (௮௧)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

குருகைவளம்பதிமாறனூர்கொழிதமிழாரமுதுண்ணுநின்
இருகுழையஞ்செவிகோதுசேரொனகவிநஞ்சமுமுண்ணுமால்
பெருகருள்வேங்கடநாயகாபேதையசோதைமனைக்கணுள்
ஒருகனிவாய்நறுவெண்ணெயுமுண்டதுமண்ணையுமுண்டதே. ()

மடக்கு—எண்சீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தம்.

உண்டு மண்ணெலா முமிழு மாயனு
ரோங்கு வேங்கடத் துறையு மாயனூர்
தொண்டை நாடுவா ழுஞ்சொல் வஞ்சியார்
தொழுமெ னைத்தினைத் துணையும் வஞ்சியார்
கொண்டல் சேறுவார் குழலு மோங்கலே
கோவை தாழிளங் குயமு மோங்கலே
அண்டு மைக்கணீ ராவிக் காவியே
யவர்வி ருப்பினே னுவிக் காவியே. (௮௩)

தாழிசை.

காவி வண்ணர்வட மலைய கத்திலுறை
கன்னர் செஞ்சரண கஞ்சமும்
கனக வாடைதிக ழிடையு மேடுவிரி
கமல நாறுதிரு நாபியும்
பூவி லன்னமமர் மார்பு நேமிவளை
பொலிகை யங்கபய வரதவண்
பொற்கை யானசத பத்திர நாலுநறை
பொழிது ழாய்கமழு வாகுவும்
மேவு பன்மணியி னணிது லங்குதிரு
மிடறு மின்னகையின் வதனமும்

விலையி லாதகல பவள வாயுமெழின்
மிக்க நாசியு மொளிக்குழாம்
ஏவு பொன்மகர குண்ட லச்செவியு
மிணைவி ழிக்கருணை வாரியும்
இலகு கன்னுதலு மௌலி யுந்தமிய
ளிதய முண்டுகளி கொண்டதே. (அச)

கட்டளைக்கலித்துறை.

களிகொண்டெமக்கருள் வேங்கடவாவெதி கட்கரசன்
அளிகொண்டளித்த வளையாழிவாங்கினை யற்புதமா
களிகொண்டபூங்குழற் பெண்ணரசாயின நங்கைசெங்கை
ஒளிகொண்டவால்வளை யாழிகைக்கொள்வ துசிதமன்றே. ()

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

உசிதமறைக் குலம்போற்றும் வேங்கடத்தெம் பெருமான்
உருக்கனக மதிற்கிழைத் திருப்பதியில் ரத்தின
வசிதமன மலிதெருவி லடருவிற்கு மடவாய்
வாரையும்வள் ளையுந்தின்டிற் கண்செவப்பாய் வெம்மைப்
பசிதவிர்க்கு முன்னைவிரும் பினனெனிலோன் றேனும்
பகரமதி யாய்வேளை பார்த்தளிக்க மாட்டாய்
சசிமருவு பதிவரினு மாரைநீ காட்டச்
சம்மதியா யுனக்கிந்தத் தன்மையடா தனவே. (அரு)

வஞ்சி விருத்தம்.

வேதனைத்தரு விமலனென்
காதன் வேங்கட நாயகன்
பாத மல்லது பற்றுமே
ஏத மற்றவ ரிதயமே. (அஎ)

நேரிசைவெண்பா.

மேதக்க நின்பெருமை வேலைக் கரைகாணக்
கோதற்ற நான்முகற்குங் கூடுமோ - ஓதரும்பொன்

மண்டபந்தா மேவு வடமலையாய் நீயாடக்
கொண்டபந்தா மண்டக் குழாம். (அஅ)

எழுசீர்க்கழிநெடில் ஆசிரிய மடக்குவிருத்தம்.

அண்டனண் டத்துக் கதிபதி பதியா
மாழிய ஞாழியை வலத்திற்
கொண்டவன் கொண்ட னிறத்திரு னிறத்திற்
கோதையான் கோதைநீங் குந்தி
முண்டகன் முண்டக் கண்ணினன் கண்ணு
முத்தன்முத் தருவிவேங் கடவே
தண்டவான் றண்டா தரிப்பவன் றரிக்குந்
தனுவனைத் தனுவெடார் தாழ்வார். (அக)

பதின்சீர்க்கழிநெடில் ஆசிரிய விருத்தம்.

தாழ்வா ருக்குயர் வாழ்வைத் தருமால் வேங்கடவன்
சயிலத் தைத்தரி சித்தர்ச் சனைசெய்த் திச்செயமேல்
சூழ்வா னோர்சொரி தோயத் துளிநே சித்துதவும்
தாபஞ் செஞ்சுடர் பொற்றுந் துமிரா தந்தமைநீ
வீழ்வா னிற்றுளி பேழ்வாய் மேகத் தின்படலம்
மின்னுப் பேரிடி யென்பா யுன்னிப் பாரலவால்
வாழ்வா லாய்வெரு வேலுன் மணவா ளன்கொடிமுன்
வருமா ரம்புனல் வீழும் பொருமா ரன்கொடியே. (௧௦)

ஆசிரியத்துறை.

மாரன் கொடிமுன்னே வந்தது காண்மின்னே
சேரன் றுரைடையென்றுற் சிதையாதோநீ செப்பாயால்
சேரன் றுரைடையுன்றுற் சிதையா தினிமாதே
ஓரஞ் சனவெற்பா னுகப்பாயணைவா னுணைத்தானே. (௧௧)

கட்டளைக்கலித்துறை.

உளைத்தானவாரண மன்றழைத்தாங்குள் ளுகந்தழைக்கும்
எளைத்தானவாரண மெய்திவந்தாள்கிலை யென்மொழிமோ
அளைத்தானவாரணை மும்போற்றும்வேங்கடத் தற்புதபூ
மிளைத்தானவாரணக் கண்டத்தின்மாதுறை மார்பத்தனே. ()

வலைச்சியார்

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

பத்தருக்குயிரானவர்வேங்கடப்பரமனூர்திருநாட்டில்
மைத்தகண்ணிணைமுலைச்சியாரெனவருவலைச்சியார்கண்வாளை
வைத்திருக்கையையன்னவராலையுமங்கனேகண்டாற்பூ
ஒத்தகைத்தலங்கூட்புவார்கெஞ்சுவாருள்ளமீனசையாரோ. ()

௧௦அ - அடிநேரிசை ஆசிரியப்பா.

உசைதருபொருளைஉணிமிகவிட்டத் — திசையிருநான்குஞ்செ
ய்லுபுதிரிந்த — பன்னுமந்திஞ்சொற்பைந்தமிழமுதை — மன்
னுயிர்க்கிரங்காமானிடர்தொள்ளைச் — செவிக்கமரொழுக்குஞ்
செந்நாப்புலவிர் — புவித்தலைநீரைம்பொறிக்கிரைதேடலின் —
எய்தியபாவமுமின்மையுநீங்கிநீர் — உய்திறந்தமியேனுரைதுவல்
கேண்மின் — தவலருவறுமைதலைப்படயானும் — கவலை
யுற்றுழபசிகனற்றிடத்தேம்பி—உலகின்மாக்களையும்மிற்பாடி—
அலைவுறுமெல்லையினுகூழ்பிடர்பிடித் — துந்தலின்வேங்கடவு
யர்வரைசூழ்நாட் — டந்திற்சேர்ந்தனனுயிடைநிலமுதிர்—கூரி
ருட்படலங்கூட்டுணும்பல்கதிர்ச் —சூரியனவிர்வெண்சுடர்கொ
ப்புளிக்கும் — மதிமகன்வீட்டில்வருமதிவரலால் — பதின்மர்
பாட்டுகந்தபதுமநாபியனே — அத்திருப்பதியிலயர்விழாவினிற்
போய்ப் — பத்தியிற்பணிந்துபயன்பெறுபாக்குக் — குடங்கை
யினமர்முக்கோலினர்காவிப் —படம்பொதியரையினர்பன்னிரு
திருமட்—காப்பின்மேனியர்கடைதுளவின்மணி— மாப்பங்கய

மணிவடமசைமார்பினர் — திண்புயத்தேற்றுந்திருப்புற்கூடை
யர்—வண்பதத்திருவகைமறைபகர்வாக்கினர்—பெருகருளெதி
பதிபெயர்பூண்டிலகும் — அரிவாட்படையினரரையுரத்தப்பி
னர் — சிறுகோலாலடிசேமக்கலத்தினர் — மறுவிலாமுகமேல்
வளர்திகழ்மாருதி — முகத்தினர்சதியின்முறைநடிதாளினர்—
அகத்தெழுபரிவானடிக்கடிபணியா—வருவிரதத்தினர்வண்கவு
ளிணையில்—உருவக்குத்தியவொண்ணிறக்கம்பி—பூட்டினர்கை
யிற்புடைதாளத்தர் — ஈட்டுமின்னரம்பின்யாழொடுகின்னரி—
தண்டையிஞெலியொடுதமகளத்தொனிபோய்—அண்டியபாடு
மரிகீர்த்தனத்தர் — தொளைவேய்த்துண்டஞ்சுரிமுகக்குடக்கூ
ன்—வளையூதழகியவாய்ப்பவளத்தினர்—நீற்றைத்தைஇயநெற்
றியர்சந்தனச்—சேற்றைத்தடவியசெழுமத்தகத்தினர்—வடியி
டுகுங்குமமட்குறிநுதலினர்—அடைவினின்முத்திரையைந்தணி
மேனியர் — மறித்தோல்சுற்றுமருங்கினர்புலியின் — பொறித்
தோலுடையினர்புரிசடைக்கற்றையர் — சிரத்திற்சுமையர்திர
டோட்சுமையர் — கரத்திற்சுமையர்கனிவாய்மக்களை—ஏந்துபு
பின்வருமில்லினராதரம் — சேர்ந்துடன்வருமாத்திரளினர்தம்
முன் — பலகொடிதுயல்வரப்பல்லியமுழங்க—மலிகுழாங்கூடி
வருபெருஞ்சீரினர் — ஏறுமேற்றினரிவர்பரிமாவினர் — வீறிய
தம்மேல்விரிநிழற்கவிகையர்—ஊருஞ்சிவிகையருகைக்குமுவா
வினர்—பாரப்படைக்கலம்பற்றுந்தானையர்—ஒழியாதெறும்பூ
ரொழுக்கெனவெண்டிசை—வழிதொறுநடந்துமழையுருமார்ப்
ப—தெனக்கோவிந்தவெனுங்குரன்முழங்கக்—கனைக்கடல்வாய்
வருகடுவாலியாறெனத்—தன்பிதாவழியச்சதுமுகன்படைத்த—
மன்பதையெல்லாம்வரவிடுத்தனனென — வருபிரசைத்திரள்
வகைதரிசித்துத்—திருவளர்கீழைத்திருப்பதிதொழுது—பார்த்
தவர்வினையும்பாற்றிடுமாழ்வார் — தீர்த்தந்தோய்ந்துசெய்கட
ன்முடித்து—மோட்டுக்கவயமுலைசொரிதீம்பால் — ஈட்டஞ்சுர
நதிக்கிணையாப்பெருகி — அனுதினஞ்சாரலவனம்வளர்க்கும்—

னெரியுரற்காற்கரிமருப்பிடிக்கக்—கொம்பினிருலின்குலங்கிழி
க்அற்றும்—வம்புலாந்தாரையைவாளரவென்னச்—சிறைமயில்
கொத்தித்தித்திடலால் — நறையென்றறிந்துணுநனிவரை
காந்தட்—செங்குலைபாய்பறழ்திரளழல்வீழ்ந்தென—அங்கெடு
த்தோமெருவிதோய்த்தந்தக் — குழவியின்மேலக்குளிரருவிப்
புனல் — பொழிசெம்மணியைப்புன்னைனலூதும் — மந்தியுங்
கானவர்வன்குடிலிற்பாய்ந் — துந்தினவெனவெழுந்துடற்கூன்
பலவின் — இருங்கனிச்சுளையாலெறிதலுமாவின் — பெருங்கனி
யாலெறிபேய்வாழ்க்கடுவனும்—திரிதருகுன்றெனத்தேவருமுனி
வரும் — வருதினந்துதிக்கும்வடமலைவணங்கி — அருமைப்பத்
திபுரிருமைசற்றின்றிப் — பெருமைகெழீஇயபிரபத்தியுமே —
அழியாமுத்தியடைகுநர்க்கிரண்டு — வழியாந்தன்மையின்மா
யனைக்காண்பார்க் — கேறுதற்கரியனவெளியனவாய்மிக—வீறு
படித்திரண்மெல்லக்கடந்து — செம்பொன்விமானஞ்சேவித்த
ணிமதில்—பைம்பொற்கோபுரம்பற்பலமண்டபம்—மணிமயத்
தேருர்மறுகுமாளிகையின் — கணமெலாமிருகண்களிப்புறநோ
க்கி — கிளரில்கோனேரிசீர்படிந்ததற்பின் — புகரில்கோயிலுட்
புக்கிருதுழைதோய்—கண்ணனுங்கமலக்கடவுளைக்கார்மணி—
வண்ணனையலர்மேன்மங்கைநாயகனை — ஒப்பிலாமாலையுலகெ
லாம்புரக்கும் — அப்பனையிறைஞ்சியஞ்சலித்தேத்திப் — புன்
சொற்கவிசிலபுகன்றனென்கிளிசொலும் — இன்சொலெனக்கே
ட்டெனையாட்கொள்ள—உடனேயங்கவனுபயவிபூதி—அடைய
வுமெனவேயாகப்பெற்றனன்—இன்னணநீயிருமேகிமற்றம்ம—
அன்னவனைப்பணிந்தன்பால்வாழ்த்திப்—பாடுமினிகத்தும்பரத்
தும்—கேடிலாவாழ்வுகிடைக்குமாலினியே. (கச)

சவலைவெண்பா.

இனிமன் மதாசலமெ னெங்கேனும் போய்வில்
குனிமன் மதாசலத்தின் கும்பம்

தங்கம் புயத்தார்தங் தார்சேட வெற்பருந்தி
தங்கம் புயத்தார்தங் தார். (௬௫)

தூது—கலிவிருத்தம்.

தாராவையும்போதாவையுந்தான்வேண்டினேனூன்வேண்டியே
நீராவிமீனாராயவேகினைவுற்றவிங்கெணேகத்துமோ
வாராயெழில்கூராயிழாய்வடவேங்கடத்தடவோங்கல்வாழ்
ஓராழியார்நாராயணர்க்குன்னுணையோதென்னுசையே. (௬௬)

எண்சீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

என்னிடத்தில் வேங்கடமா லன்பி லாநா
ளிதுவெனப்பார்த் தெய்மதனு வெம்பி ராற்குத்
தன்னிடத்தி லதிகபத்தி யுடைய மாந்தர்
தம்மிடத்தி னேசமலாற் றயவி லாத
உன்னிடத்தி னேசமுண்டோ வுரையாய் தன்பா
லுறுமடியா ரடியவரை யொருவை குந்த
மன்னிடத்தில் வைத்தனனுன் னடிய ரான
மக்களைப்போல் லாநரகில் வைக்கின் றனே. (௬௭)

கட்டளைக்கலித்துறை.

ஆனுதகிர்த்தித் திருவேங்கடத்துறை யச்சுதனீ
தானுதரிக்கத் துதித்தேனல்லேனிந்தத் தாரணியில்
மேனுளின்மானிடம் பாடியநாச்சுத்த மேவுதற்கு
நானுசையாற்றுதி செய்தேனுன்புண்ணிய நாமத்தையே. (௬௮)

நேரிசைவெண்பா.

மந்தவரை காத்தபெரு மான்வேங் கடத்துதியார்
பித்தரவர் வாயோ பிலவாயே—சித்தம்வளர்
கோணுக்கண் ணேங்கிவெளிக் கொண்டலைச்சி றம்மலையைக்
காணுக்கண் சித்திரத்தின் கண். (௬௯)

கட்டளைக்கலித்துறை.

கண்ணாயிரம்பெற்ற கோனுலகோங்கிய கற்பகக்காத்
தண்ணாரும்பூவையும் வேண்டிலம்வேண்டித் தலைக்கணிபூ
எண்ணார்க்கிருளன்ன வேங்கடத்தான்றொண்ட ரேவற்றொழில்
பண்ணாசைத்தொண்ட ரவர்தொண்டர்தொண்டர் பதமலரே.

சந்தக்கலிவிருத்தம்.

முத்த மிழ்க்கவி வீர ராகவன்
பத்தி யிற்றுதி பாவின் மாலையை
நித்த நித்தமு மோது வாரவர்
அத்த னப்பன தாளை வாழ்வரே.

முற்றிற்று.